<u>கொடைக்கானல் நகராட்சி</u>

2020ம் ஆண்டு ஜுன் மாதம் 30ஆம் நாள் (30.06.2020) செவ்வாய்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு கொடைக்கானல் நகராட்சி நகர்மன்றக் கூடத்தில் தனி அலுவலர் தலைமையில் நடைபெறும் சாதாரணக் கூட்டம்.

முன்னிலை: த. நாராயணன், பி.எஸ்.சி., எம்.பி.ஏ.,
தனி அலுவலர்.

1) கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான மண் அணை அருகில் உள்ள புதிய திறந்த வெளி கிணற்றில் இருந்து குடிநீர் எடுத்து அருகில் உள்ள Clear Water Sump க்கு இணைப்பு கொடுப்பதற்கு தேவையான குடிநீர் உதிரி பொருட்கள் (80 mm GI pipe and materials) வாஙகுவதற்கு குடிநீர் நிதியின் மூலம் மதிப்பீடு ரூ. 3.67 இலட்சம் தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: குடிநீர் பணியின் அவசர தேவையினை கருத்தில் கொண்டு மேற்கண்ட பணியினை குடிநீர் நிதியின் மூலம் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **839, நாள். 30.06.2020.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

2) கொடைக்கானல் நகராட்சிக்கு செல்லபுரம் தடுப்பணை அருகில் உள்ள புதிய திறந்த வெளி கிணற்றில் இருந்து குடிநீர் எடுத்து அருகில் உள்ள Clear Water Sump க்கு இணைப்பு கொடுப்பதற்கு தேவையான குடிநீர் உதிரி பொருட்கள் (80 mm GI pipe and materials) வாஙகுவதற்கு குடிநீர் நிதியின் மூலம் மதிப்பீடு ரூ. 3.81 இலட்சம் தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: குடிநீர் பணியின் அவசர தேவையினை கருத்தில் கொண்டு மேற்கண்ட பணியினை குடிநீர் நிதியின் மூலம் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **840, நாள். 30.06.2020.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

3) கொடைக்கானல் நகராட்சிகு சொந்தமான செண்ட் மேரிஸ் சாலையில் அமைந்துள்ள நகராட்சி ஆணையர் குடியிருப்பு மேல்புறம் உள்ள சாலைபணியாளர் குடியிருப்பு மிகவும் சேதமடைந்து இடியும் நிலையில் உள்ளது. 100 ஆண்டுகளுக்கு மேலான இக்கட்டிடம் மண் சுவரால் அமைக்கப்பட்டுள்ளதால் தொடர்ந்து மராமத்து செய்து புதுப்பிப்பதற்கு ஏற்றதாக இல்லாமல் இடியும் நிலையில் உள்ளது. இதனால் அருகில் உள்ள ஆணையர் குடியிருப்பும் சேதமடையும் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, இக்கட்டிடத்தினை இடித்து அப்புறப்படுத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: 1) அனுமதிக்கலாம்.
2) வருவாய் கேட்பில் இருந்து இக்கட்டிடத்தினை நீக்கம் செய்திட மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **841, நாள். 30.06.2020.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

4) கொடைக்கானல் நகர் பகுதியில் கொரோனா வைரஸ் நோய் பரவாமல் தடுப்பதற்காக பல்வேறு தடுப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதில் வயதானவர்கள் மற்றும் தனிக்கவனம் செலுத்த வேண்டியவர்களுக்கு மற்றவர்கள் வீட்டிற்கு உள்ளே செல்லாமல் இருப்பதற்கும், அப்படியே செல்லவேண்டிய சூழ்நிலையில் உரிய பாதுகாப்புடன் செல்லவேண்டி அதற்குரிய விழிப்புணர்வு நோட்டீஸ் ( Awarness Sticker Notice A4 Size) ஒவ்வொரு வீட்டிற்கும் ஒட்டுவதற்கு 10,000 எண்ணம் தேவைப்படுகிறது. மேற்கண்ட நோட்டீசினை கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கையின் அவசர அவசியம் கருதி அரசு கூட்டுறவு நிறுவனமான திண்டுக்கல் மாவட்ட அச்சக சேவைத் தொழிற் கூட்டுறவு சங்கம் லிட்., 16ஏ, எஸ்.ஆர். மில்ஸ் ரோடு, திண்டுக்கல்லில் வாங்கிக் கொள்ளவும், அதற்கான செலவுத் தொகைக்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. இதற்காகும் உத்தேச செலவுத் தொகை ரூ. 1.00 இலட்சம் (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) ஆகும்.

அலுவலக குறிப்பு.

1. அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. இதற்கான செலவினத்தினை கொரோனா வைரஸ் தடுப்பு நிதி அல்லது பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **842, நாள். 30.06.2020.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

5) கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான மண் அணை மற்றும் செல்லபுரம் தடுப்பணை பகுதியில் Ring well அமைக்கும் பணிக்கு 24.06.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பீட்டு அட்டவணை மன்றத்தின் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு இலட்சத்தில் | ஒப்பந்தக்காரரின் பெயர் (திருவாளர்கள் ) | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீடு விகிதத்திற்கு) |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | மண் அணை மற்றும் செல்லபுரம் தடுப்பணை பகுதியில் Ring well அமைத்து பிரதான குழாயில் இணைப்பு வழங்குதல் | 6.80 | S.குமரேசன்.<br>P.சுப்பிரமணி | 0.51% குறைவு<br>2.96% அதிகம் |

அலுவலக குறிப்பு.

1) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
2) அவசர அவசியம் கருதி தனி அலுவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **843, நாள். 30.06.2020.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

6) கொடைக்கானல் நகராட்சியில் வார்டு டி, பிளாக் 3, நகரளவு எண். 40, அண்ணாசாலை, பழைய மார்க்எகட் பின்புற பகுதியில் நவீன ஆட்டிறைச்சிக் கூடம் அமைக்கும் பணிக்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ந.க.எண். 15140/2019/இ1 நாள். 08.11.2019 ன்படி கீழ்க்கண்டவாறு நிர்வாக அனுமதி வழஙகப்பட்டுள்ளது.

**(ரூ.இலட்சத்தில்)**

| வ. எண். | பணி விபரம் | திட்ட மதிப்பீட்டுத் தொகை | IGFF 2007-2008 ன் கீழ் ஏற்கனவே ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ. | CGF2019-2020 ன் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டிய தொகை ரூ. | நகராட்சி பொது நிதி பஙகளிப்பு ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | கொடைக்கானல் நகராட்சி, வார்டு டி, பிளாக் 3, நகரளவு 40 அண்ணாசாலை பழைய மார்க்கெட் பின்புற பகுதியில் நவீன ஆட்டிறைச்சிக் கூடம் அமைத்தல் | 130.00 | 40.00 | 77.00 | 13.00 |

இப்பணியினை மேற்கொள்வதற்கு நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமைப் பொறியாளர், சென்னை அவர்களின் செயல்முறை ந.க.எண். 30326/2019/டிஓ2 நாள். 25.02.2020 ல் தொழில் நுட்ப அனுமதி வழஙகப்பட்டுள்ளது (தொழில்நுட்ப அனுமதி எண். 537/2019–2020)

அதன்படி இப்பணியினை மேற்கொள்வதற்கு 17.03.2020 மற்றும் 02.04.2020 ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் பெறப்படவில்லை. மூன்றாம் ஒப்பந்தப்புள்ளி 10.06.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன.

1) திரு எம்.என். சலாமத்<br>நகராட்சி ஒப்பந்ததாரர் — மதிப்பீட்டினை விட 4.33 விழுக்காடு அதிகம்<br>கொடைக்கானல் .

2) திரு எம்.ஆர். பிலால் இப்ராஉறிம்,<br>நகராட்சி ஒப்பந்ததாரர், — மதிப்பீட்டினை விட 5.48 விழுக்காடு அதிகம்<br>கொடைக்கானல்

ஒப்பந்ததாரர்களிடம் விலைக்குறைப்பு கோரியதில், ஒப்பந்ததாரர்களால் விலைக் குறைப்பு வழஙக இயலாது என தெரிவித்து கடிதம் சமர்ப்பித்துள்ளனர். எனவே, வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு.</u>

1) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியும் மதிப்பிட்டினை விட 4.33 விழுக்காடு அதிகமாகவும் கொடுத்துள்ள திரு எம்.என்.சலாமத் , ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை பொறியியல் கையேடு விதி 2.7.2 ன்படி ஏற்கலாம்.
2) கூடுதல் தொகை மற்றும் நகராட்சி பஙகுத் தொகையினை பொது நிதியின் மூலம் செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம். (கோப்பு ந.க.எண். 0027/2019/இ1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **844, நாள். 30.06.2020.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

7) கொடைக்கானல் நகராட்சி பகுதியில் உள்ள 24 வார்டுகளுக்கும் தலைமை நீர்த்தேக்கம் மற்றும் நகர் பகுதியில் உள்ள திறந்த வெளி கிணறுகளில் இருந்து குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. நகராட்சி மூலம் விநியோகம் செய்யப்படும் குடிநீரினை சுகாதார முறையில் பாதுகாக்கப்பட்ட குடிநீராக வழஙகிடும் பொருட்டு திறந்த வெளி கிணறுகளில் திரவ பிளாண்டேசின் ( உறபோ குளோரைடு முறையில் ) பிளாண்ட் நிறுவுவதற்கு குடிநீர் நிதியின் மூலம் மேற்கொள்ள கீழ்க்கண்டவாறு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண். | பணியின் விபரம் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான ஆனந்தகிரி 4–வது தெரு கிணற்றில் உறைபோ குளோரின் பிளாண்ட் அமைத்தல் | 6.90 |
| 2 | கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான எம்.எம். தெரு கிணற்றில் உறைபோ குளோரின் பிளாண்ட் அமைத்தல் | 6.95 |
| 3 | கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான மலர்ந்த ரோஜா கிணறு எண். 1–ல் உறைபோ குளோரின் பிளாண்ட்அமைத்தல் | 6.90 |
| 4 | கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான மலர்ந்த ரோஜா கிணறு எண். 2–ல் உறைபோ குளோரின் பிளாண்ட்அமைத்தல் | 7.40 |
| 5 | கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான பில்டிங சொசைட்டி கிணற்றில் உறைபோ குளோரின் பிளாண்ட்அமைத்தல் | 6.65 |
| 6 | கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான அப்சர்வேட்டரி செக்டேம் டேஙகில் உறைபோ குளோரின் பிளாண்ட்அமைத்தல் | 7.45 |
| 7 | கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான லாயிட்ஸ் சாலை கிணற்றில் உறைபோ குளோரின் பிளாண்ட் அமைத்தல் | 6.91 |
| 8 | கொடைக்கானல் நகராட்சிக்கு தலைமை நீர்த்தேக்க பம்ப் அறையில் உறைபோ குளோரின் பிளாண்ட் அமைத்தல் | 8.72 |

பாதுகாக்கப்பட்ட குடிநீரினை பொதுமக்களுக்கு வழங்கிட இயலும் என்பதினால் இப்பணிகளை மேற்கொள்வதற்கும், இதற்காக ஆகும் செலவினத்தினை குடிநீர் நிதியின் மூலம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : சுகாதாரமான,பாதுகாக்கப்பட்ட குடிநீரினை பொதுமக்களுக்கு வழங்கிடும் பொருட்டு மேற்கண்ட பணியை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **845, நாள். 30.06.2020.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

8) கொடைக்கானல் நகர் பகுதியில் குடிநீர் வழுங்கும் அணையின் நீர்மட்டம் வெகுவாக குறைந்துள்ளதால், நகர் பகுதியில் சீரான குடிநீர் வழங்க இயலாத சூழ்நிலை உள்ளது. எனவே, தனியார் குடிநீர் லாரியினை வாடகைக்கு அமர்த்திட 19.06.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பீட்டு அட்டவணை மன்றத்தின் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு இலட்சத்தில் | ஒப்பந்தக்காரரின் பெயர் (திருவாளர்கள்) | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீடு விகிதத்திற்கு) |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | குடிநீர் லாரிகள் வாடகைக்கு அமர்த்துதல் | 10.00 | சாலிகா வாட்டர் சர்வீஸ்<br>ராஜா வாட்டர் சர்வீஸ், | 4.76% குறைவு<br>4.76% அதிகம் |

அலுவலக குறிப்பு.

1) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
2) அவசர அவசியம் கருதி தனி அலுவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **846, நாள். 30.06.2020.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

ஒம்/—த.நாராயணன்,
தனி அலுவலர்,
கொடைக்கானல் நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்,
கொடைக்கானல் நகராட்சி.